அசல் வழக்கு எண்.58 /2013 நாள்: 07.04.2026

பி.சா.2 திரு. ரெத்தினசாமி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

9) எனது எதிர்வழக்குரையின் 5 வது பத்தி மற்றும் பிராமண வாக்குமூலத்தில் பத்தி 6–ல் 17.07.1970–ல் 1–ம் பிரதிவாதி தனது சகோதரர் சின்னராசு சுண்டையர் அவர்களுக்கு வீட்டிலுள்ள பிரிப்படாத 5–ல் 1 பாகத்தினை பதிவான பரிவர்த்தனை பத்திரம் மூலம் எழுதி வாங்கியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது தகப்பனார் சொல்லி எனக்கு தெரியும். 1970 லிருந்து எனது தகப்பனார் இறக்கும்வரை 1970–ல் வாங்கிய பத்திரம் தொடர்பாக வருவாய் துறையில் புல எண் உட்பிரிவு செய்ய மனு கொடுத்திருந்ததா என்றால் ஆமாம், அது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது, எனது தகப்பனார் சொல்லி தெரியும். அவ்வாறு உட்பிரிவு செய்ய மனு கொடுத்தது தொடர்பான ஆவணத்தை நான் பார்த்து உண்டா என்றால் இல்லை. அவ்வாறு உட்பிரிவுக்கு எனது தகப்பனார் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அவ்வாறு மனு தாக்கல் செய்திருந்தால் இந்த வழக்கில் அதை தாக்கல் செய்திருப்பார் என்றால் சரியல்ல.

10) பி.சா.ஆ.2 பரிவர்த்தனை ஆவணம் மூலம் எனது தந்தை சின்னராசுக்கு எழுதிக்கொடுத்த சொத்துக்கள் அனைத்தும் எங்கள் வசமே அனுபவம் உள்ளது என்றால் வீடு, தோட்டமும் உள்ளது வயல் யாரிடம் உள்ளது என்று தெரியாது. பி.சா.ஆ.2 பரிவர்த்தனை ஆவணம் பெயரளவில் ஏற்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல, மேற்படி ஆவணம் உண்மையில் ஏற்பட்டிருந்தால் எனது தந்தை மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் உரிமைக் கோரி வருவாய் துறையில் பெயர் மாற்றங்கள் செய்திருப்பார் அவ்வாறு இல்லை என்பதால்தான் அதற்குரிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் 6 வது பத்தி மற்றும் எதிர்வழக்குரை பத்தி 5–லும் இந்த வாதியும், 1–ம் பிரதிவாதியும் 1985–ல் வாய்மொழியாக இந்த தாவா வீட்டினை பிரித்து கொண்டனர் அவ்வாறு வாய்மொழியாக பிரித்த காலத்தில் வீதிக்கு அடுத்த வடபுறம் கிழமேல் 26 அடி, தென்வடல் 21 அடி உள்ள RCC பாகம் ஒதுக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளதுபோல் பி.சா.ஆ.4 ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதுபோன்று இல்லை.

11) பி.சா.ஆ.4–ல் 1985–ல் வாய்மொழியாக ஏற்பட்ட பாகத்தை கிரையம் வாங்கியதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் பி.சா.ஆ.4–ல்

பிரிப்படாத பாகத்தில் காலிமனை எவ்வளவு, கட்டிடம் எவ்வளவு என்று நான்கெல்லைகள் தனித்தனியாக குறிப்பிடப்படவில்லை என்றால் கட்டிடம் காட்டப்பட்டுள்ளது, காலிமனை காட்டப்படவில்லை. அவ்வாறு காட்டப்பட்டுள்ள கட்டிடம் கிழமேல் 26, தென்வடல் 21 ஒரு பகுதி, மற்றொரு பகுதி தென்வடல் 12 அடி, கிழமேல் 13 அடி என்றால் சரி, அவ்வாறு இரண்டு பகுதிக்கும் தனித்தனி நான்கெல்லைகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் பத்தி மற்றும் பிராமண வாக்குமூலம் பத்தி 13 லும் 1–ம் பிரதிவாதி கடந்த 10.11.2004–ல் கிரையம் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12) மேற்படி 1–ம் பிரதிவாதி என்பவர் யார் என்றால் எனக்கு தந்தை ஆறுமுகம். பி.சா.ஆ.4 ஆவணத்தின்படி 10.11.2004 கிரைய ஆவணத்தின்படி கிரையதாரர் நான்தான். 2004–ல் கிரையம் வாங்கிய முதல் தற்போது வரை நான் வருவாய் துறையினரிடம் பி.சா.ஆ.4 உட்பிரிவுக் கோரி நான் மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் 2013 க்கு முன்பு உட்பிரிவு செய்வதற்கு மனு கொடுத்தேன். மேற்படி மனுவினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அதுபோன்று உட்பிரிவு மனு தாக்கல் செய்யவில்லை என்றாலும், அவ்வாறு தாக்கல் செய்திருந்தால் அம்மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

13) பி.சா.ஆ.4 ஆவணம் சட்டத்திற்கு புறம்பாக ஏற்படுத்தப்பட்டது என்றாலும், செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் பத்தி 6 லும், எதிர்வழக்குரை பத்தி 5 லும் 1–ம் வாதி கலியபெருமாள் 2–ம் வாதி மாரிமுத்து ஆகியோர் ஆசிரியராகவும், கிராம நிர்வாக அலுவலராகவும் தாவா கிராமத்தைவிட்டு வெளியேறி பல இடங்களில் பணிபுரிந்து வந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் 1–ம் கலியபெருமாள் பூதலூரில் குடியிருந்தார், 2–ம் வாதி ஊரிலும் இருப்பார் வெளியிலும் இருப்பார். மேற்படி 1, 2 வாதிகளுக்கு ஊரில் தாவா சொத்து மற்றும் விவசாய நிலங்கள் எல்லாம் உள்ளது என்றால் சரிதான். நான் எப்போது பிறந்தேன் என்றால் 1984–ல் பிறந்தேன். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் பத்தி 6 லும் எதிர்வழக்குரை பத்தி 5 லும் தாவா வீட்டில் வாதிகளுக்குரிய பாகத்தை பொறுத்து எனது தந்தை தலா ரூ.30000/– பெற்றுக்கொண்டு விட்டனர் என்று கூறியுள்ளதை பொறுத்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது தகப்பனார் சொல்லிதான் தெரியும். மேற்படி விவரங்கள் இந்த வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் எனது தந்தை சொல்லி எனக்கு தெரியும்.

14) 1990லிருந்து 2013 வரை மேற்படி விவரத்தை எனது தந்தை என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான். உண்மையில் எனது தந்தை 1990–யே பணம் கொடுத்திருந்தார் என்னிடம் அப்போதே சொல்லிருப்பார், பணம் கொடுக்காததால்தான் என்னிடம் தெரிவிக்கவில்லை என்றாலும், பின்னிட்டு 2013–க்கு பிறகு வழக்கு தாக்கல் செய்தபிறகு தெரிவித்தார் என்று நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் எனது தந்தை எதிரிடை பாத்தியம்கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தந்தை நீதிமன்றத்திற்கு வரும்போதெல்லாம் நான்தான் அழைத்து வருவேன் என்றால் சரியல்ல, பேருந்தில் வருவார். எனது தந்தை இந்த வழக்கில் என்ன எதிர்கட்சி செய்தார் என்றால் எனது தாத்தாவின் சொத்தில் பாகம் வேண்டும் என்று கட்சி செய்தார்.

15) எனது முதல்விசாரணை வாக்குமூலம் பத்தி 6லும் எதிர்வழக்குரை பத்தி 5லும் 1–ம்பிரதிவாதி வாதிகளிடம் தேவைப்படும்போது பத்திரம் எழுதி வாங்கிகொள்ளலாம் என்று இருந்துவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளேன் அந்த விவரங்கள் எனது தந்தைக்கு தான் நேரடியாக தெரியும் என்றால் சரிதான், எனது தந்தை சொல்லி எனக்கு தெரியும். எனது தந்தை சொல்லி எனக்கு தெரியும் என்று வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணை வாக்குமூலம் பத்தி 7லும் எதிர்வழக்குரை பத்தி 6லும் அ.வ.எண்.121/1976 வழக்கு நடந்தாக சொல்லியுள்ள விவரங்கள் பொறுத்து நான் அப்போது பிறக்காத காரணத்தினால் அதன் விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது தந்தை சொல்லி தெரியும். மேற்படி அ.வ.எண்.121/76–ல் கூட்டு குடும்ப சொத்து தொடர்பாக வழக்கு நடந்ததா அல்லது எனது அப்பாவின் சுயசம்பாத்திய சொத்து தொடர்பாக வழக்கு நடந்ததா என்றும், அதில் என்ன முடிவு எட்டப்பட்டது என்றும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது அப்பா சொல்லித் தெரியும்.

16) மேற்படி அ.வ.எண்.121/76 வழக்கு யார் தாக்கல் செய்தார் என்றும், யார் வாதி, பிரதிவாதி என்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.121/76–வழக்கில் முழுமையாக நடந்து தீர்ப்பு பகரப்பட்டதா, இடையில் சமாதானம் செய்து முடிக்கப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது, தீர்ப்பு வந்த விவரம் மட்டும் எனது தந்தை சொல்லி தெரியும் என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.121/76 தீர்ப்பான பிறகு தீர்ப்பின் அடிப்படையில் கிடைக்கப்பட்ட சொத்து தாவா சொத்து நத்தம் நிலவரிதிட்ட மேம்பாட்டின்படி வாதிகள் ராஜாங்கம்

மற்றும் எனது தந்தை பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

17) எனது முதல்விசாரணை வாக்குமூலம் பத்தி 8 லும் எதிர்வழக்குரை பத்தி 7 லும் பி.சா.ஆ.5 தாவா வீட்டில் 1-ம் வாதிக்குரிய பாகத்திற்காக கிரையத்தை ரூ.30000 பெற்றுக்கொண்டபோலவே, 1-ம் வாதிக்கு மேற்படி 1960 ஆண்டு பாகப்பத்திரத்தில் ஒதுகப்பட்ட நன்செய் புல எண்.529/1A-ல் 51 செண்டில் பாதி பாகத்தை மேற்படி 1ம் வாதி 1-ம்பிரதிவாதியிடமிருந்து 27.06.1981 அன்று பெற்றுக்கொண்ட கடன் தொகை ரூ.3500 க்காக எடுத்துக்கொள்ளும்படி கொடுத்துவிட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் பிறக்காத காரணத்தினால் எனக்கு தெரியாது, எனது தந்தை சொல்லி தெரியும். மேற்படி புல எண்.529/1A குறிப்பிட்டு ஆவணம் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் 1, 2 வாதிகளிடம் பணம் எதுவும் எனது தகப்பனார் பெறவில்லை என்றால் சரியல்ல.

18) என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.5-ல் கடனாக வாங்கியதாகவோ, நிலத்திற்காக வாங்கியதாகவோ புல எண் குறிப்பிட்டோ எழுதப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் மேற்படி பி.சா.ஆ.5-ல் இன்னாருக்கு இன்னார் பணம் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். வாதிகள் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்று நான் குறிப்பிட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வாதிகள் பெயரில் வீட்டு வரி ரசீது, மின் கட்டண ரசீது, குடும்ப அட்டை உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சித்திரக்குடி மெயின் ரோட்டில் 2-ம் வாதிக்கு வீடு உள்ளது என்றால் சரிதான், அதேபோல் 1-ம் வாதிக்கு பூதலூரில் வீடு உள்ளது என்றால் சரிதான்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

S.d/Rethinasamy

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.07 16:51:41 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU